HSC 12TH

STANDARD பொதுத் தமிழ்

மாதிரி வினாத்தாள் – 3

நேரம் : 2.30 மணி                                                  மதிப்பெண் : 90

பகுதி – அ

(செய்யுள், உரைநடை)

I. பலவுள் தெரிக. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 6 x 1 = 6

1. கம்பர் பிறந்த ஊர்

அ. திருவழுந்தூர் ஆ. மோகனூர் இ. திருவாதவூர் ஈ. ஒதலூர்

2. மணிமிடை பவளத்தில் உள்ள பாடல்களில் எண்ணிக்கை

அ. 120 ஆ. 200 இ. 100 ஈ. 180

3. திரைகவுள், தண்குடை ஆகியவற்றின் இலக்கணக் குறிப்பு

அ. பண்புத்தொகை, வினைத்தொகை ஆ. வினையெச்சம் , பண்புத்தொகை

இ. வினைத்தொகை, உம்மைத்தொகை ஈ. வினைத்தொகை, பண்புத்தொகை

4. சரியான இணையைத் தேர்க.

| புலவர்கள் | | இயற்றிய நூல்கள் |
|---|---|---|
| அ) இளங்கோவடிகள் | - | மணிமேகலை |
| ஆ) திருத்தக்கதேவர் | - | சிலப்பதிகாரம் |
| இ) நாதகுத்தனார் | - | குண்டலகேசி |
| ஈ) சீத்தலைச் சாத்தனார் | - | சீவக சிந்தாமணி |

5. “வாங்கிய ஆழி தன்னை வஞ்சர் ஊர் வந்த தாமென்

றாங்குயர் மழைக்கண்ணீரால் ஆயிரம் கலசம் ஆட்டி” இவ்வடியில் பயின்று வரும் ஆழி எனும் சொல்லிற்கான இரு பொருள்

அ. கடல், சக்கரம் ஆ. கடல், மோதிரம் இ. மோதிரம், தேர் ஈ. ஆழம், வளம்

6. அன்னத்தின் தோழி

அ. நீலி ஆ. கண்ணுக்கினியாள் இ. வீராயி ஈ. பூங்கொடி

II. அ. குறுவினா(எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக) 3 x 2 = 6

7. கம்பர் இயற்றிய வேறு நூல்கள் யாவை?

8. அகநானூற்றுப் பாக்களின் திணை அமைப்பு முறையை விளக்குக.

9. ‘ வையமும் வானகமும் ஒப்பாகா – எதற்கு ?

10. தவம் செய்த தவமாம் தையல் – யார்? யார் கூற்று?

**ஆ) குறுவினா(எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக)** 2 x 2 = 4

11. தமிழ் உயர்மொழி என உரைக்கப்படக் காரணம் யாது?

12. மனிதன் சமரசத்தைப் பற்றிப் பேசுவதிலும் அதை நடைமுறைக்குக் கொணர்வதே அறிவுடைமை என்பதை நிறுவுக.

13. அறுமுறை வாழ்த்து – விளக்குக.

III. **அ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக)** 2 x 4 = 8

14. கம்பர், ‘நன்றே நம்பி குடிவாழ்க்கை’ என வியந்து கூறுவதன் நயத்தை விளக்குக.

15. வினைத்திட்பத்தின் சிறப்பும் அஃதுடையார் எய்தும் பயனும் குறித்து எழுதுக.

16. பொதுவியல் திணை (அல்லது) புணர்ந்து நீங்கிய தலைவனைத் தோழி வரைவு கடாயது – துறையைச் சான்றுதந்து விளக்குக.

**ஆ) சிறுவினா(எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக)** 2 x 4 = 8

17. தமிழ்மொழி தனித்தியங்கும் தன்மையுடையது – எங்ஙனம்?

IV. **அ) நெடுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக)** 2 x 6 = 12

20. செய்ந்நன்றியறிதல் குறித்து வள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

மறப்பரிது நும் நன்றி – என்று கூறிய அன்னத்திடம் வேலன் கூறிய எழுச்சி உரைகள் யாவை ?

21. பேராசிரியர் வையாபுரியார் கூறும் கவிதையின் இயல்புகள் யாவை?

(அல்லது)

மனித வாழ்வின் உயர்வுக்கு அடிப்படையாக இருக்க வேண்டியவை குறித்து மு.வ.உரைப்பன யாவை?

**ஆ) அடி பிறழாமல் எழுதுக.** 4+2 = 6

22. அ. ‘இந்திய நாடிது ..........’ எனத் தொடங்கும் நாட்டு வாழ்த்துப் பாடல்

ஆ. ‘……………........தொழில்’ என முடியும் திருக்குறள்

**பகுதி – ஆ**

**(இலக்கணம், துணைப்பாடம், மொழிப் பயிற்சி)**

V. **பலவுள் தெரிக .(அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.)** 8 x 1 = 8

23. சரியான இணையைத் தேர்வு செய்க.

(அ). திண்மை + திறல் – திண்டிறல்

(ஆ). திண் + திறல் – திண்டிறல்

(இ). திண் + டிறல் – திண்டிறல்

(ஈ). திண்ண் + திறல் – திண்டிறல்

24. ஷேமம் - பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தேர்ந்தெடுக்க.

(அ). அழகு

(ஆ). நலம்

(இ). வாழ்த்து

(ஈ). அன்பு

25. தருகுவென் என்னும் சொல்லின் பொருத்தமான பகுபதப் பிரிப்பு முறையைத் தேர்க.

(அ). தா + கு + வ் + என்.

(ஆ) தரு + கு + வ் + என்.

(இ) தருகு + வென்.

(ஈ) தருகு + வ் + என்.

26. திருத்தமான மரபுச் சொல்லை த் தேர்ந்தெடுக்க.

(அ) யானை ஊளையிட்டது.

(ஆ) யானை முழங்கியது.

(இ) யானை பிளிறியது.

(ஈ) யானை எக்காளமிட்டது.

27. வேலி என்னும் சிறுகதையை எழுதியவர்.

(அ) ராஜம் கிருஷ்ணன்.

(ஆ) வல்லிக்கண்ணன்.

(இ) ஜெயகாந்தன்

(ஈ) கந்தர்வன்.

28. வல்லெழுத்து மிக்குள்ள சரியான சொற்றொடரைக் கண்டறிக.

(அ) எதையும் எழுதி பழகவேண்டும் என்று எனக்கு சொன்னார் ஆசிரியர்.

(ஆ) எதையும் எழுதிப் பழகவேண்டும் என்று எனக்குச் சொன்னார் ஆசிரியர்.

(இ) எதையும் எழுதிப் பழகவேண்டும் என்று எனக்கு சொன்னார் ஆசிரியர்.

(ஈ) எதையும் எழுதி பழகவேண்டும் என்று எனக்குச் சொன்னார் ஆசிரியர்.

29. செறுவார் என்பதன் பொருள்.

(அ) நண்பர்.

(ஆ) தந்தை.

(இ) பகைவர்.

(ஈ) தாய்.

30. குறிப்பினால் உணரும் கொள்கையான்.

(அ) அனுமன்.

(ஆ) இராமன்.

(இ) சீதை.

(ஈ)இராவணன்.

31. பலாப்பிஞ்சு, வாழைப்பிஞ்சு, இளந்தேங்காய் ஆகியவற்றிற்கான மரபுச் சொற்களைத் தருக.

32. பின்வரும் தொடர்களைச் சேர்த்தெழுதியும், பிரித்தெழுதியும் இருபொருள் தருக.

(அ) இரும்படியும் ( ஆ) பலகைத் தொழில்.

33. உவமை அணி என்றால் என்ன?

34. தமிழாக்கம் தருக.

1) Art is long life is short.
2) Delay is dangerous.

35. ஒன்றனுக்கு இலக்கணக் குறிப்பு தருக.

(அ) அவியா (ஆ) வைவேல்.

36. ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

(அ) மணந்த (ஆ) வாழ்த்துவம்

37. அலை , அளை, அழை பொருள் வேறுபாடறிந்து சொற்றொடர் அமைக்க.

38. ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.

(அ). கருத்தோடிசைத்த

(ஆ) தினந்தினம்

39. முத்தமிழ் – தொகைச்சொல்லை விரித்தெழுதுக.

**VII நெடுவினா(எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக)** 3 x 4 = 12

40. பழமொழியை விளக்கி, வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

சிறு துளி பெருவெள்ளம்

(அல்லது)

செந்தமிழ் என்னும் தலைப்பில் கவி புனைக.

41. தற்குறிப்பேற்ற அணி அல்லது எடுத்துக்காட்டு உவமை அணியை விளக்குக.

42. கீழ்க்காணும் பத்தியைப் படித்துணர்ந்து வினாக்களுக்கு விடை தருக.

பாட்டியல் நூல்கள் சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை விளக்கிக் கூறுகின்றன. பாட்டியல் நூல்களுள் வச்சணந்திமாலை குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய நூலாகும். வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதியில் பிரபந்தம் தொண்ணூற்றாறு எனக்கூறி அவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார். கோவை, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, அந்தாதி முதலியவை சிற்றிலக்கியங்களுள் சிறப்பானவைகளாகக் கருதப்பெறுகின்றன.

**வினாக்கள்.**

(அ) சிற்றிலக்கியங்கள் மொத்தம் எத்தனை?

(ஆ) வீரமாமுனிவர் இயற்றிய அகராதியின் பெயர் என்ன?

(இ) சிற்றிலக்கிய நூல்கள் சிலவற்றைக் கூறுக.

(ஈ) பாட்டியல் பிரபந்தம் என்னும் வடசொல் உணர்த்தும் பொருள் யாது?

43. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றனை எடுத்து எழுதுக.

படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க!
பகையாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள் அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!
கொல்லாமை உயர்வென்னும் தமிழ்நாடு வாழ்க!
கொடைவள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க!
இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க!
இரவாமை அறம் என்னும் தமிழ்நாடு வாழ்க!

- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்.

VIII. **பின்வரும் துணைப்பாடப் பகுதி வினாவிற்கு இருபக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக.** 1 x 6 = 6

பால்வண்ணம் பிள்ளை கதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் விளக்கி வரைக .

(அல்லது)

‘மண்’ என்னும் சிறுகதையில் நும்மைக் கவர்ந்த கதைமாந்தர் யார்? அவர் எவ்வகையில் அதற்குப் பொருத்தமானவர் என்பதை நிறுவுக.